**தலைப்பு 204 – இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முஇந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்

கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றமை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 9,562,994 தொகை திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாக பதிவு செய்வதற்கு பதிலாக வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக வருமானம் சேகரிக்கும் ஏனை அமைச்சுகள், திணைக்களங்கள் மாத்திரம் ACA 1 இன் கீழ் உள்ளடக்கப்படக்கூடாது எனவும், குறித்த திணைக்கள வருமானம் ACA 1 இன் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தமையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 54,857,503 ஆன போதிலும், மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்களின ஆரம்ப மீதி ரூபா 6,086,907 ஆனமையால் வேறுபாடானது ரூபா 48,770,596 ஆகும். | தொடர்புடைய தொகைகள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் போது 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 54,857,503 ஆக குறிப்பிடப்படடுள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் உரிய முறையில் நிறுவனங்களின் உள்ளபடியான பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அறநெறி பாடசாலைகளுக்கு முக்கியமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,970,000 தொகை நிதி நிலமைக்கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் கொள்வனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பிரதானமாக வழங்கப்பட்ட பணம் திணைக்களத்தின் சொத்துக்களாக கணிப்பிடப்படக்கூடாது. | இணங்கியுள்ளது. |
| (இ) | திணைக்களத்திறகுரிய பல்வேறு பிரதேசங்களில் காணப்படுகின்ற காணிகள் மற்றும் 04 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | 02 கட்டிடங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு 2019 ஆம் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 02 கட்டிடங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 உத்தியோகத்தரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 46,462 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 27 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுவதுடன், இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 86,931 மீதியினை அறவீடு செய்யும் போது சிக்கல் நிறைந்த நிலமையொன்று ஏற்பட்டுள்ளமையால், அந்த கடன் மீதி பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) சேவையை கைவிட்டுச்சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 1 முதல் 24 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 66,269 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 25,800 ஆன கடன் மீதியை இம் மாதத்தினுள் செலுத்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. |

**1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| | ---------------------------- | ------------------------------ | ------------------------------------ | ------------------------------------ |
| (அ | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 237 | களஞ்சிய வழங்கள்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பொருட்கள் கிடைத்துள்ளதாக மற்றும் குறித்த பொருட் பதிவேட்டுப் பட்டியலிள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், திணைக்களத்தினால் அறநெறி பாடசாலையின் மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு சீருடைத் துணிகளை கொள்வனவு செய்யும் போது மற்றும் இந்து மக்களுக்கு சமய புத்தகங்கள் மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக உதவிப் புத்தகங்களை அச்சிடும் போது குறித்த பொருட்கள் திணைக்களத்திற்கு கிடைப்பதற்கு முன்னர் ரூபா 14,137,473 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொடுப்பனவுகளுக்காக பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த கொடுப்பனவுகள் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 264 | அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும், கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகை பெற்றுக்கொண்டதாக வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டொன்றில் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 55,007,000 கூட்டுத்தொகையான 149 கொடுப்பனவுகளுக்காக வழங்குநரிடமிருந்து பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | குறித்த பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.7 ஆம் பந்தி | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் அதற்கடுத்த ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய நூலக புத்தகங்களுக்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பொருட்களுக்குமான பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | நூலகத்திற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்குமாக முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 5 வருடங்களாக ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையங்களில் சேவையாற்ற இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் தொடர்பில் உரிய நடைமுறைகளுக்கமைய வருடாந்த கூட்டிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. உள்ளக இடமாற்றங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், 5 முதல் 24 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் சேவையாற்றும் 85 உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |
| (ஈ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 4.3.1 வழிகாட்டி | பெறுகைகளுக்காக மொத்தக்கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்கத்தினால் 21 இந்துக் கோயில்களின் அபிவிருத்தி பணிகளுக்காக ரூபா 6,000,000 தொகை வழங்கும் போது மொத்தக்கிரய மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த கிரய மதிப்பீட்டின் பிரதியொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |
| (ii) | 8.12.2 வழிகாட்டி | அமைப்புக்குறிப்பீடுகளுடன் இணங்கியுள்ள ஏனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சான்றுபடுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கிணங்க உள்ளன எனவும் சான்றுபடுத்தி சான்றிதழொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், திணைக்கத்தினால் 26 இந்துக் கோயில்களின் அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா | பணி முடிவுறுத்தும் சான்றிதழினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணி முடிவுறுத்தும் சான்றிதழினை குறித்த பதிவேட்டுடன் சமர்ப்பிக்குமாறு அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | 7,800,000 தொகை தொடர்பில் பணி முடிவுறுத்தல் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 9 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 2 மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 8 சதவீதம் முதல் 50 சதவீதம வரையான வீச்சில் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 20,557,010 ஆகும். | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள், பற்றுச்சீட்டுகள் கிடைக்காமை, விரயத்தினை குறைத்தல், தேவைப்பாடு ஏற்படாமை, கட்டுநிதி கிடைக்காமை போன்ற காரணங்களினால் சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபா 162,366 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த பொறுப்புகள் 2018 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் | ஆண்டிற்குரிய பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டியமை. | தவறுதலாக பொறுப்புகள் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் பிரயாணச் |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | | செலவினமாக ரூபா 36,610 தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேலதிக படிகளின் சேமிப்புகள் ரூபா 1,234 ஆன போதிலும், சேமிப்பினை விஞ்சி ரூபா 118,912 தொகை 2018 ஆம் ஆண்டின் செலவினங்கள் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சேமிப்புகளை விஞ்சி பொறுப்புகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது. | 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்குரிய பொறுப்புகள் ரூபா 136,622 தொகையானமையால் 2018 ஆம் ஆண்டின் சேமிப்பு ரூபா 17,710 ஆகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரை</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|---|
| (அ) | இந்து சமய புத்தகங்கள் மற்றும் அறநெறி பாடசாலையின் மாணவர்களுக்காக புத்தகங்களை அச்சிடுவதங்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 991,143 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 2019 யூன் 18 ஆந் திகதியளவில் ரூபா 380,413 பெறுமதியான புத்தகங்கள் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | எதிர்பார்த்த நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு பெறுகை நடவடிக்கைகள் சிறப்பாக திட்டமிடப்பட வேண்டியமை. | கடந்த வருடத்தில் கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் நிலவிய நிலமைகள் காரணமாக புத்தகங்களை அச்சிடுவதற்கான கட்டளைகளை வழங்கும் போது தாமதம் ஏற்பட்டது. இது வரையிலும், அந்த புத்தக அச்சீட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடங்களில் இந்த புத்தகங்கள் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்காக சீருடைத் துணிகளை கொள்வனவு செய்வதற்கான பணிகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், 1,000 சேலைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,150,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது திசெம்பர் மாதத்தில் ஆகும். எவ்வாறெனினும், 2019 மே 30 ஆந் திகதி வரையிலும் 400 சேலைகளே கிடைத்திருந்தன. கொள்வனவு பணிகளை ஆண்டிய இறுதியில் ஆரம்பித்தமையால் 2019 மே வரையிலும் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு பெறுகை நடவடிக்கைகள் சிறப்பாக திட்டமிடப்பட வேண்டியமை. | சீருடைத் துணிகளை கொள்வனவு செய்யும் போது அசாதாரணமான தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள சீருடைகளை பகிர்ந்தளிக்கும் பணிகள் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான நிலமைகளை தடுப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு துரதமான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். |

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்ததுடன், பெறுமதி உறுதிப்படுத்த முடியாத சிதிலமடைந்த 350 வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 101 மற்றும் 102 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தி பராமரித்தல் மற்றம் அகற்றும் பணிகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | புத்தகங்கள் அரச நிதியினை பயன்படுத்தி அச்சிடப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய இதற்குரிய நிதிப்பிரமாணம் 101 மற்றும் 102 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2030 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட அடையப்பட வேண்டிய இலக்குகள் 17 திணைக்களத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடவில்லை. |

மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.